செ.வெ.எண். 02/செப்டம்பர் தேதி : 01.09.2016

# பத்திரிக்கைச் செய்தி

## டெங்கு விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது



தர்மபுரி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் எடுத்த நடவடிக்கை காரணமாக காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் மிகவும் குறைவாக உள்ளது, மேலும் பரவாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் எடுக்க அனைத்து துறை அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு அல்லாத பொது இடங்களில் தண்ணீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கவும் டெங்கு காய்ச்சல் பரவும் இடங்களை தீவிரமாக கண்காணிக்கவும் அனைத்து வீடுகளிலும் தண்ணீரை பாதுகாப்பான முறையில் சேமித்து மூடி வைக்கவும், திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளை தூய்மைபடுத்தும் பணி மேற்கொள்ள வேண்டுமெனவும், புதிய கட்டிடங்கள் கட்டும் இடங்கள், கல்குவாரிகள் மற்றும் இரயில் நிலையங்களில் தண்ணீர் தேங்காமல் இருக்க தேவையான நடவடிக்கை எடுக்கவும், பள்ளி வளாகங்களில் தண்ணீர் தேங்காமல் இருக்க பள்ளி மாணவர்களுக்கு தேவையான விழிப்புணர்வை ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும் அறிவுறுத்தப்பட்டது.

சுகாதார மற்றும் மருத்துவ துறை மருத்துவ அலுவலர்கள் கொசுபுழுவை அழிக்கவும், கொசு தடுப்பு புகை மருந்து அடித்து கொசுவை ஒழிக்கவும், கிராமம் மற்றும் நகர பகுதிகளை சுத்தம் செய்ய உள்ளாட்சி துறையுடன் இணைந்து செயல்பட வேண்டுமெனவும், அங்கன்வாடி பணியாளர்கள், மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள், தூய்மை காவலர்கள், ஊராட்சி செயலர்கள் ஆகியோருக்கு சிறப்பு விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட வேண்டும் எனவும், மேலும் ஓட்டல்கள், தங்கும் விடுதிகள், சினிமா தியேட்டர் உரிமையாளர்கள் அனைவருக்கும் டெங்கு ஒழிப்பு பற்றி விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர், அரசு தருமபுரி மருத்துவகல்லூரி மருத்துவமனை மரு. சுவாமிநாதன், இணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. ஜானகி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி. ஆர்த்தி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.